**நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்-1, பத்மநாபபுரம்**

**முன்னிலை திருமதி. V. பார்கவி, B.A., B.L., LLM.,**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்-1,

**2026** ஆம் ஆண்டு ஜூலை மாதம் 1-ம் நாள் **புதன் கிழமை**

திருவள்ளுவர் ஆண்டு 2057, பராபவ வருடம் ஆனி திங்கள் 17-ம் நாள்

**ஆண்டுப்பட்டியல் வழக்கு எண்.137/2023**

**CNR.No.TNKK09001486-2023**

அரசுக்காக, காவல் உதவி ஆய்வாளர்,

தக்கலை காவல் நிலையம்,

குற்ற எண்.347/2019 ................ குற்றமுறையீட்டாளர்

**/எதிர்/**

கிட்டோ கிளாட்சன்(வயது 28/2023),

த/பெ.டேவிட்சன்,

மச்சன்கரா விளை,

காடுவெட்டி,

முளகுமூடு. ................... 1 ம் குற்றம் சுமத்தப்பட்ட நபர்

மணி (எ) மணிகண்டன், ................. 2 ம் குற்றம் சுமத்தப்பட்ட நபர்

த/பெ. கிருஷ்ணன் (எ) ராஜேந்திரன், (Charge abated)

கோழிப்போர்விளை,

முளகுமூடு

(2-ம் குற்றம் சுமத்தப்பட்ட நபர் 06.03.2022-ம் தேதி இறந்துவிட்டபடியால், அவர் மீதான வழக்கு அற்றுபோய்விட்டது.)

பெறோஸ் (எ) முகமது பெறோஷன்,

த/பெ. ஷாகுல் ஹமீது,

சுவாமியார்மடம்,

காட்டாத்துறை. ................ 3 ம் குற்றம் சுமத்தப்பட்ட நபர்

# CASE SUMMARY

| Statement as per Rule 106 of the Criminal Rules of Practice, 2019 | | | |
|---|---|---|---|
| 1. | Case Number | | Calendar Case (CC) No.137 of 2023 |
| 2. | Name of the Police Station and Crime Number | | State of Tamilnadu,<br>Represented by its<br>Sub Inspector of Police,<br>Thuckalay Police Station,<br>Thuckalay. (Cr.No.347/2019).<br>…..Complainant |
| 3. | Name of the Accused person | Description of the Accused | A1- Kitto Gladson<br>A2 – Mani @ Manikandan (Charge abated)<br>A3 – Pherosh @ Muhamed Peroshan |
| 4. | Father's/Husband's Name | | A1 Son of Davidson<br>A2 Son of Krishnan @ Rajendran<br>A3 Son of Sahul Hameed |
| 5. | Occupation | | A1 and A3 - Labourer |
| 6. | Residence of the Accused | | A1 - Machankara Vilai, Kaduvetty, Mulagumoodu.<br>A3 -Swamiyarmadam, Kattathurai. |
| 7. | Age and Gender | | A1 – 34/2023, Male.<br>A3 - 29/2023, Male |
| 8. | Date of Occurrence | Date of | 29.06.2019 at 21.30 hrs |
| 9. | Date of Information to the Police | | 30.06.2019 at 21.00 hrs |
| 10. | Apprehension | | Anticipatory bail |
| 11. | Release on Bail | | |
| 12. | Period of remand of the accused | | -- |
| 13. | Filing of complaint/final report in the Court | Date | 25.02.2023 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 14. | Committal of the case to the Court of Sessions | of | Nil | | |
| 15. | Questioning of the accused u/s 281 of Cr.P.C | | 28.11.2025 | | |
| 16. | Commencement of Trial (the date on which the documents u/s 207 of the Cr.P.C are furnished to the accused | | 31.10.2025 | | |
| 17. | Examination in Chief and Cross examination of a witness | | Witness | Chief Examination | Cross Examination |
| | | | P.W.1 | 29.05.2026 | 29.05.2026 |
| | | | P.W.2 | 29.09.2025 | 29.09.2025 |
| | | | P.W.3 | 29.09.2025 | 29.09.2025 |
| | | | P.W.4 | 10.06.2026 | 10.06.2026 |
| 18. | Date of examination of the accused under section 313(1)(b) of Cr.P.C | | 23.06.2026 | | |
| 19. | Closure of Trial | | 23.06.2026 | | |
| 20. | Details of abscondence of an accused and his appearance/production, as the case may be | | Warrant | Abscondence | Appearance |
| | | | Non-Bailable Warrant | - | - |
| 21. | Grant of stay by superior Courts and results thereof | | Nil | | |
| 22. | Sentence or Order | | முடிவாக, 1-ம் குற்றம் சுமத்தப்பட்ட நபரின் மீதான இ.த.ச. 1860 பிரிவுகள் 294(பி), 326-ன் கீழும், 3-ம் குற்றம் சுமத்தப்பட்ட நபரின் மீதான இ.த.ச. 1860 பிரிவுகள் 294(பி), 325-ன் கீழான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படாததால் சந்தேகத்தின் பலனை இவ்வழக்கின் 1 மற்றும் 3-ம் குற்றம் சுமத்தப்பட்ட நபர்களுக்கு அளித்து 1 மற்றும் | | |

<table>
<tr><td></td><td></td><td></td><td>3-ம் குற்றம் சுமத்தப்பட்ட நபர்களை இவ்வழக்கின் குற்றவாளிகள் இல்லை என தீர்மானித்து கு.வி.மு.ச. பிரிவு 248(1)-ன் கீழ் 1 மற்றும் 3-ம் குற்றம் சுமத்தப்பட்ட நபர்களை விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.</td></tr>
<tr><td>23.</td><td>Service of copy of judgment of findings on accused</td><td></td><td>Copy of the judgment will be uploaded in CIS and made available for viewing in e-courts services portal.</td></tr>
<tr><td>24.</td><td>Explanation of delay</td><td></td><td>-</td></tr>
<tr><td>25.</td><td>Details of victim compensation ordered</td><td></td><td>Nil</td></tr>
<tr><td>26.</td><td>Filing of miscellaneous petitions and their results including the results on challenge before Superior Court</td><td></td><td><table>
<tr><td>Petition</td><td>Crl.M.P.No</td><td>Result</td></tr>
<tr><td>Surrender petition</td><td>2468/2019</td><td>Allowed on 02.08.2019</td></tr>
<tr><td>Surrender petition</td><td>2445/2019</td><td>Allowed on 02.08.2019</td></tr>
<tr><td>Surrender petition</td><td>2021/2019</td><td>Allowed on 04.07.2019</td></tr>
</table></td></tr>
</table>

இவ்வழக்கு 25.02.2023 அன்று நீதிமன்றத்தில் கோப்பிற்கு எடுக்கப்பட்டு இது நாள் வரை இந்நீதிமன்றத்தில் பரிசீலனையில் இருந்து வந்து இவ்வழக்கு 23.06.2026 இந்நீதிமன்ற இறுதி விசாரணைக்கு வரப்பெற்று அரசு தரப்பில் அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை 1 அவர்களும், 1-ம் குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R.ஜோண்ஸ்., அவர்கள் ஆஜராகியும், 3-ம் குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.ஏசுராஜா மற்றும் V.ஜெரோம், ஆகியோர்கள் ஆஜராகியும் வாதத்தை கேட்டும் ஆவணங்களை பரிசீலனை செய்தும் ஆராய்ந்தும் இன்று 01.07.2026 ஆம் தேதி நீதிமன்றம் கு.வி.மு.ச 1973 அத்தியாயம் XXVII ன் கீழ் பிறப்பிக்கும்.....

**<u>தீர்ப்புரை</u>**

**1.** இவ்வழக்கானது தக்கலை காவல் நிலைய உதவி ஆய்வாளர் அவர்கள் குற்றம் சுமத்தப்பட்ட நபர்களுக்கு எதிராக இந்திய தண்டனைச்சட்டம் 294(பி), 325 மற்றும் 326

பிரிவுகளின் கீழ் குற்ற எண்.347/2019-ல் தாக்கல் செய்யப்பட்டுள்ள இறுதியறிக்கையின்பேரில் தொடரப்பட்டதாகும்.

**2. அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட குற்ற இறுதி அறிக்கையின் சுருக்கம் :-**

இவ்வழக்கில் கடந்த 29.06.2019-ம் தேதி 21.30 மணியளவில் புகார்தாரர் மற்றும் சாட்சி 2 ஆகியோர்கள் அழகியமண்டபம் அரசு மதுபான கடை அருகே பீர் சாப்பிட்டு கொண்டிருக்கும்போது குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் புகார்தாரரை பார்த்து தகாத வார்த்தைகளால் பேசி நீ ஊரில் எங்களை மதிக்க மாட்டாயா என்று கேட்டு, 1-ம் குற்றம் சுமத்தப்பட்ட நபர் கையில் அணிந்திருந்த சில்வர் காப்பால் புகார்தாரரின் வலது கண்ணின் கீழ் குத்தி கொடுங்காயம் ஏற்படுத்தியும், 2 மற்றும் 3 குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் மாறி மாறி புகார்தாரரின் வலது கன்னம் வலது பக்க கழுத்து பின் தலை முதுகு பக்கத்தில் அடித்து கொடுங்காயம் ஏற்படுத்தியது குறித்தும் குறிப்பிட்டு 1-ம் குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கு எதிராக இ.த.ச. 1860 பிரிவுகள் 294(பி),326-ன் கீழும், 2 மற்றும் 3-ம் குற்றம் சுமத்தப்பட்ட நபர்களுக்கு எதிராக இ.த.ச. 1860 பிரிவுகள் 294(பி), 325-ன் கீழும் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளதாக இறுதியறிக்கையானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

(இவ்வழக்கில் 2-ம் குற்றம் சுமத்தப்பட்ட நபர் 06.03.2022-ம் தேதி இறந்துவிட்டப்படியால் 2-ம் குற்றம் சுமத்தப்பட்ட நபர் மீதான வழக்கு (Charge abated) அற்று போய்விட்டது)

**3. கு.வி.மு.ச 1973 பிரிவு 207 ன் கீழ் வழக்கு ஆவண நகல்கள் :-**

இவ்வழக்கின் 1 மற்றும் 3-ம் குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் நீதிமன்றத்தில் முன்னிலையானவுடன் குற்றமுறையீட்டாளர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட வழக்காவணங்களின் நகல்கள் அனைத்தும் கு.வி.மு.ச 1973 பிரிவு 207 ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டது.

**4. கு.வி.மு.ச 1973 பிரிவு 240 ன் கீழ் குற்றச்சாட்டு வனைதல் :-**

வழக்காவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டதின் அடிப்படையில் இவ்வழக்கின் 1, 3 குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் குற்றம் புரியப்பட்டிருக்கலாம் என அனுமானம் கொள்வதற்கு ஆதாரம் இருந்ததால் கு.வி.மு.ச 1973 பிரிவு 240-ன் கீழ் 1-ம் குற்றம் சுமத்தப்பட்ட நபரின் மீது இ.த.ச. 1860

பிரிவுகள் 294(பி), 326 -ன் கீழும், 3 குற்றம் சுமத்தப்பட்ட நபரின் மீது இ.த.ச. 1860 பிரிவுகள் 294(பி), 325-ன் கீழும் தனித்தனியே குற்றச்சாட்டுகள் வனையப்பட்டது.

**5.** வனையப்பட்ட குற்றச்சாட்டுகளை கு.வி.மு.ச **1973 பிரிவு 240(2)-ன்** படி தமிழில் எடுத்துக்கூறி விளக்கி வினவப்பட்டது. இவ்வழக்கின் 1, 3 குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் பொய் வழக்கு எனகூறி குற்றச்சாட்டுகளை மறுத்து வழக்கு விசாரணைக்கு வேண்டினார்கள். எனவே அரசுதரப்பு சாட்சிகளின் விசாரணைக்கு கு.வி.மு.ச 1973 பிரிவு 242 ன் கீழ் உத்தரவிடப்பட்டது.

**6. <u>கு.வி.மு.ச 1973 பிரிவு 242 ன் கீழ் அரசுத்தரப்பு சாட்சிய சான்றாவணங்கள் :-</u>**

அரசுத்தரப்பில் அ.சா.1 அகில், அ.சா.2 அஜின், அ.சா.3 பிரட்லின் டினோ, அ.சா.4 ராஜகுமார் (தலைமை காவலர் - கூடுதல் சாட்சி) ஆகியோர்கள் அ.சா.1 முதல் அ.சா.4 வரையிலான சாட்சிகளாக விசாரிக்கப்பட்டு அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.8 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கில் வழக்கு சொத்து எதுவும் அரசு தரப்பில் குறியீடு செய்யப்படவில்லை.

**7. <u>அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களின் சுருக்கம்:-</u>**

கடந்த 29.06.2019-ம் தேதி 21.30 மணியளவில் புகார்தாரர் மற்றும் சாட்சி 2 ஆகியோர்கள் அழகியமண்டபம் அரசு மதுபான கடை அருகே பீர் சாப்பிட்டு கொண்டிருக்கும்போது குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் புகார்தாரரை பார்த்து தகாத வார்த்தைகளால் பேசி நீ ஊரில் எங்களை மதிக்க மாட்டாயா என்று கேட்டு, 1-ம் குற்றம் சுமத்தப்பட்ட நபர் கையில் அணிந்திருந்த சில்வர் காப்பால் புகார்தாரரின் வலது கண்ணின் கீழ் குத்தி கொடுங்காயம் ஏற்படுத்தி, 2 மற்றும் 3 குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் மாறி மாறி புகார்தாரரின் வலது கன்னம் வலது பக்க கழுத்து பின் தலை முதுகு பக்கத்தில் அடித்து கொடுங்காயம் ஏற்படுத்தியதாக குறிப்பிட்டு 1-ம் குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கு எதிராக இ.த.ச. 1860 பிரிவுகள் 294(பி),326-ன் கீழும், 2 மற்றும் 3 குற்றம் சுமத்தப்பட்ட நபர்களுக்கு எதிராக இ.த.ச. 1860 பிரிவுகள் 294(பி), 325-ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றத்திற்குரிய இறுதியறிக்கையானது தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிட்டு அரசு தரப்பில் சாட்சியங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

**8.** அரசு தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களிலிருந்து தெரிய வரும் அரசு வழக்கின் சுருக்கம் என்னவென்றால், இவ்வழக்கின் நிகழ்நிலை புகார்தாரரான **அ.சா.1 அகில்** என்பவரின் சாட்சியத்தில் சம்பவம் பற்றியும், அவருக்கு ஏற்பட்ட காயம் பற்றியும், அ.சா.ஆ.1 புகார் மனு கொடுத்தது பற்றியும், **அ.சா.2 அஜின்** மற்றும் **அ.சா.3 பிரட்லின் டினோ** ஆகியோர்கள் சாட்சியத்தில் பார்வை மகஜரில் உடனிருந்து கையொப்பமிட்டது பற்றியும், **அ.சா.4 ராஜகுமார்** தலைமை காவலர் ஆவணங்களின் அடிப்படையில் சிறப்பு உதவி ஆய்வாளருக்கு பதிலாக சாட்சியம் அளித்து தனது சாட்சியத்தில் 30.06.2019-ம் தேதி 19.00 மணியளவில் நிலைய பொறுப்பில் இருந்த சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்த விஷ்ணுகுமார் என்பவருக்கு ஆசாரிபள்ளம் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலின்பேரில் மருத்துவமனைக்கு சென்று அங்கு சிகிச்சையில் இருந்த அ.சா.1 அகில் என்பவர் கொடுத்த **அ.சா.ஆ.1** புகார் வாக்குமூலத்தை பெற்று, புகார் வாக்குமூலத்தின் தன்மைக்கேற்ப காவல்நிலைய குற்ற எண்.347/2019 சட்டப்பிரிவுகள் 147, 148, 294(பி),323, 324 இதச-வின் படி **அ.சா.ஆ.4** முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, வழக்கு கோப்பை உதவி ஆய்வாளர் முரளி அவர்களின் பார்வைக்கு வைத்ததை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 01.07.2019 ம் தேதி 09.00 மணிக்கு வழக்கின் சம்பவ இடம் சென்று சாட்சிகள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு, **அ.சா.ஆ.5** மாதிரிவரைபடம் மற்றும் **அ.சா.ஆ.6** பார்வை மகஜர் தயார் செய்து, பார்வை மகஜரிலுள்ள அ.சா.2-ன் 2-வது கையொப்பம் **அ.சா.ஆ.2** எனவும், பார்வை மகஜரிலுள்ள அ.சா.3-ன் முதலாவது கையொப்பம் **அ.சா.ஆ.3** எனவும், பட்டியல் சாட்சிகள் 1 முதல் 6 வரையிலானவர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தும், முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சிறப்பு உதவி ஆய்வாளரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், அ.சா.1-க்கு சிகிச்சை அளித்த மருத்துவர் அன்வர்சாகிப் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து, **அ.சா.ஆ.7** காயச்சான்றிதழ் பெற்றும், சட்டப்பிரிவை மாற்றம் செய்து **அ.சா.ஆ.8** சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்து புலன்விசாரணையை முடித்து, 1-ம் குற்றம் சுமத்தப்பட்ட நபர் மீது இ.த.ச. 1860 பிரிவுகள் 294(பி), 326-ன் கீழும், 2 மற்றும் 3-ம் குற்றம்

சுமத்தப்பட்ட நபர்கள் மீது இ.த.ச. 1860 பிரிவுகள் 294(பி), 325-ன் கீழும் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்ததாகவும் சாட்சியம் அளித்து மேற்படி ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**9. <u>கு.வி.மு.ச 1973 பிரிவு 313 (1)(b)ன் கீழ் வினவுதல்</u> :-**

அரசுத்தரப்பில் சாட்சியம் அளித்துள்ள சாட்சிகளின் சாட்சியத்தினை தொகுத்து 1 மற்றும் 3 குற்றம் சுமத்தப்பட்ட நபர்களுக்கு பாதகமாக உள்ள சூழ்நிலைகள் குறித்து 1 மற்றும் 3 குற்றம் சுமத்தப்பட்ட நபர்களிடம் கு.வி.மு.ச 1973 பிரிவு 313 (1)(b)ன் கீழ் வினவியபோது 1 மற்றும் 3 குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் பொய் சாட்சி, பொய் வழக்கு என்றும் தங்களது தரப்பில் சாட்சிகள் இல்லை என்றும் பதில் அளித்தார்கள்.

**10. <u>கு.வி.மு.ச 1973 பிரிவு 243-ன் கீழ் 1 மற்றும் 3-ம் குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் தரப்பு சாட்சிய சான்றாவணங்கள்.</u>**

1 மற்றும் 3-ம் குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் தரப்பில் சாட்சிய சான்றாவணம் எதுவும் இல்லை என்று கூறப்பட்டதால் மேற்படி தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டு அதனடிப்படையில் 1 மற்றும் 3-ம் குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் தரப்பில் எவ்வித சாட்சியங்களும், சான்றாவணங்களும் குறியீடு செய்யப்படவில்லை.

**11.** இரு தரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் சீராய்ந்து பரிசீலனை செய்யப்பட்டன.

**12.** அரசு தரப்பில் கற்றறிந்த அரசு வழக்கறிஞர் வழக்கை சந்தேகத்திற்கிடமின்றி நிரூபணம் செய்திருப்பதாகவும், எனவே 1 மற்றும் 3-ம் குற்றம் சுமத்தப்பட்ட நபர்களுக்கு உரிய தண்டனை வழங்க வேண்டும் என்றும் வாதிட்டார்.

**13.** 1 மற்றும் 3-ம் குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர், அரசு தரப்பில் நம்பதகுந்த சாட்சிகள் யாரும் விசாரிக்கவில்லை என்றும், அரசு தரப்பில் வழக்கை சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கவில்லை என்றும், விசாரிக்கப்பட்ட அ.சா.1 முதல் அ.சா.4 வரையிலான சாட்சிகள் அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கவில்லை என்றும், எனவே சந்தேகத்தின் பலனை குற்றம் சுமத்தப்பட்ட நபர்களுக்கு அளித்து குற்றம் சுமத்தப்பட்ட நபர்களை விடுதலை செய்யவேண்டுமென்று கூறி வாதிட்டார்.

**14. இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில், 1-ம் குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கு எதிராக இ.த.ச. 1860 பிரிவுகள் 294(பி), 326-ன் கீழும், 3-ம் குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கு எதிராக இ.த.ச. 1860 பிரிவுகள் 294(பி), 325-ன் கீழான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பினால் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.**

**15. 1-ம் குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கு எதிராக இ.த.ச. 1860 பிரிவுகள் 294(பி), 326-ன் கீழும், 3-ம் குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கு எதிராக இ.த.ச. 1860 பிரிவுகள் 294(பி), 325-ன் கீழான குற்றச்சாட்டுகள் குறித்த விவாதம்.**

a) கடந்த 29.06.2019-ம் தேதி 21.30 மணியளவில் புகார்தாரரை பார்த்து தகாத வார்த்தைகளால் பேசி அவருக்கு கொடுங்காயம் ஏற்படுத்தியதாக குறிப்பிட்டு அரசு தரப்பில் முன்வைக்கப்பட்டுள்ள சாட்சியங்களுக்கு குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் தரப்பில் எவ்விதமான மறுப்புரையும், சாட்சியங்களின் வாயிலாகவோ அல்லது சான்றாவணங்கள் வாயிலாகவோ தெரிவிக்கப்படவில்லை. எனவே கடந்த 29.06.2019-ம் தேதி 21.30 மணியளவில் புகார்தாரரை பார்த்து தகாத வார்த்தைகளால் பேசி அவருக்கு கொடுங்காயம் ஏற்படுத்தியதாக குறிப்பிட்டு அரசு தரப்பில் சொல்லிய சங்கதிகள் உரிய வகையில் சந்தேகத்திற்கு இடமளிக்காமல் நிரூபணம் செய்யப்பட்டுள்ளதாகவே இந்நீதிமன்றம் கருதுகிறது.

b) **இருப்பினும் இவ்வழக்கில் சொல்லப்பட்டுள்ள 1 மற்றும் 3-ம் குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் தான் புகார்தாரரை கெட்டவார்த்தை பேசி, அவருக்கு கொடுங்காயம் ஏற்படுத்தினார்களா என்பது குறித்து சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களுடன் ஒன்றிணைத்து சீராய வேண்டியது அவசியமாகும்.**

c) இவ்வழக்கின் நிகழ்நிலை புகார்தாரரான அ.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு அ.சா.1 தனது சாட்சியத்தில், 1-ம் குற்றம் சுமத்தப்பட்ட நபரை தனக்கு தெரியும் என்றும், அவர் தனக்கு ஊர்க்காரரர் என்றும், 3-ம் குற்றம் சுமத்தப்பட்ட நபரை தெரியாது என்றும், தேதி, மாதம், வருடம் ஞாபகம் இல்லை என்றும், தனது ஊரில் பிரச்சனை நடந்தது என்றும், சாயங்காலம் நேரம் என்பதால் யார் தன்னை அடித்தார்கள் என்று தெரியவில்லை என்றும், சந்தேகத்தின்

அடிப்படையில் குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் மீது புகார் கொடுத்ததாக அரசு தரப்பு வழக்கிற்கு முற்றிலும் முரணான வகையில் சாட்சியம் அளித்துள்ளார்.

d) மேலும், பார்வை மகஜர் சாட்சிகளான அஜின் மற்றும் பிரட்லின் டினோ ஆகியோர்கள் அ.சா.2 மற்றும் அ.சா.3 ஆக விசாரிக்கப்பட்டு, அவர்கள் தங்களது சாட்சியங்களில் வழக்கு பற்றி வேறு எந்த விவரங்களும் தெரியாது என்றும், போலீசார் தங்களை விசாரிக்கவில்லை என்று அரசு தரப்பு வழக்கிற்கு முற்றிலும் முரண்பட்ட வகையில் சாட்சியம் அளித்து பிறழ் சாட்சிகளாக கருதப்பட்டுள்ளார்கள்.

e) மேற்படி அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சியங்களின் சாட்சியத்தை பரிசீலினை செய்தபோது 1 மற்றும் 3-ம் குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் தான் அ.சா.1-ஐ கெட்டவார்த்தைகள் பேசியதாகவோ, அ.சா.1ஐ காயப்படுத்தியதாகவோ குறிப்பிட்டு அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சிகள் எந்த சாட்சியமும் அளிக்கவில்லை என்பது இந்நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது. மேலும், காயம்பட்ட அ.சா.1-க்கு சிகிச்சை அளித்த மருத்துவர் நீதிமன்றத்தில் ஆஜராகி அரசு தரப்பு வழக்கை நிரூபணம் செய்யும் வகையில் சாட்சியம் எதுவும் அளிக்கவில்லை.

f) இவ்வழக்கில் புலன்விசாரணை அதிகாரிக்கு பதிலாக ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியமளித்துள்ள தலைமை காவலர் ராஜ குமார் என்பவர் அ.சா.4 ஆக விசாரிக்கப்பட்டு, அவர் தனது சாட்சியத்தில், புலனாய்வு அதிகாரி வழக்கை, கோப்புக்கு எடுத்துக்கொண்டு முதல் தகவல் அறிக்கையின் பேரில் முறையாக விசாரணை செய்து, சம்பவ இடம் சென்று சாட்சிகள் அஜின் மற்றும் பிரட்லின் டினோ ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரிவரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்து, பட்டியல் சாட்சிகள் 1 முதல் 6 வரையானவர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து, மருத்துவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து, காயச்சான்றிதழ் பெற்றும், அதன் பிறகு விசாரணை முடிக்கப்பட்டு குற்றப்பத்திரிக்கை தயார் செய்ததாகவும், ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளித்துள்ளார்.

g) மேற்படி ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளித்துள்ள அ.சா.4 ன் சாட்சியத்தை மட்டும் வைத்து 1 மற்றும் 3-ம் குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் தான் புகார்தாரரை கெட்டவார்த்தைகள் பேசி, அடித்து காயம் ஏற்படுத்தினார்கள் என்று தீர்மானிக்க முடியாது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

**16.** மேலும் அ.சா.ஆ.1 புகார் மனுவினை ஒத்துரைக்கும் வகையில் எந்தொரு தனிநபர் சாட்சியும் சாட்சியம் அளிக்கவில்லை. மேலும், அ.சா.ஆ.1 புகார் மனு அளித்த புகார்தாரரே தனது புகார் மனுவை ஒத்து சாட்சியம் அளிக்காதது அரசு தரப்பில் சொல்லப்பட்டவாறு சம்பவம் நடைபெற்றதா என்பது குறித்து சந்தேகம் எழும் வகையில் இந்நீதிமன்றம் கருதுகிறது. இவ்வாறாக அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களுக்கு இடையே உள்ள முரண்பாடுகளுக்கு எவ்விதமான விளக்கங்களும், காரணங்களும் அரசு தரப்பில் ஏற்றுக்கொள்ளத்தக்க வகையில் அளிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

**17.** மேலே விவரிக்கப்பட்டுள்ளவாறு சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களுக்கு இடையே உள்ள முரண்பாடுகள், சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் விதம், குற்றம் சுமத்தப்பட்ட நபர்களை அடையாளம் காட்டப்படாமை, சாட்சிகளின் நம்பகத்தன்மை மற்றும் இவ்வழக்கில் புலன் விசாரணை மேற்கொள்ளப்பட்ட விதம் ஆகியவை குறித்து அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமளிக்காத வகையில் ஏற்கத்தக்க உரிய விளக்கங்கள் மற்றும் காரணங்கள் ஏதும் அளிக்கப்படாததால் அரசு தரப்பானது 1 மற்றும் 3-ம் குற்றம் சுமத்தப்பட்ட நபர்களுக்கு எதிரான வழக்கினை சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்க தவறிவிட்டதாக இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**18.** மேற்சொன்ன விவரங்களை கருத்தில் கொண்டும் சாட்சிய சான்றாவணங்களை பரிசீலனை செய்ததன் அடிப்படையிலும் 1-ம் குற்றம் சுமத்தப்பட்ட நபரின் மீதான இ.த.ச. 1860 பிரிவுகள் 294(பி), 326-ன் கீழும், 3-ம் குற்றம் சுமத்தப்பட்ட நபரின் மீதான இ.த.ச. 1860 பிரிவுகள் 294(பி), 325-ன் கீழான குற்றச்சாட்டுகளை அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபணம் செய்யவில்லை என்று இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

**19. தீர்வு :-**

முடிவாக, 1-ம் குற்றம் சுமத்தப்பட்ட நபரின் மீதான இ.த.ச. 1860 பிரிவுகள் 294(பி), 326-ன் கீழும், 3-ம் குற்றம் சுமத்தப்பட்ட நபரின் மீதான இ.த.ச. 1860 பிரிவுகள் 294(பி), 325-ன் கீழான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படாததால் சந்தேகத்தின் பலனை இவ்வழக்கின் 1 மற்றும் 3-ம் குற்றம் சுமத்தப்பட்ட நபர்களுக்கு அளித்து 1 மற்றும் 3-ம் குற்றம் சுமத்தப்பட்ட நபர்களை இவ்வழக்கின் குற்றவாளிகள் இல்லை என தீர்மானித்து கு.வி.மு.ச. பிரிவு 248(1)-ன் கீழ் 1 மற்றும் 3-ம் குற்றம் சுமத்தப்பட்ட நபர்களை விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

**20. கு.வி.முச 1973 பிரிவு 452-ன் கீழ் உத்தரவு:-**

மேலும், இவ்வழக்கில் தடயச்சொத்து எதுவும் கைப்பற்றப்படாததால் அது குறித்த உத்தரவு எதுவும் கு.வி.முச 1973 பிரிவு 452-ன் கீழ் இல்லை.

**21. வழக்கில் கு.வி.மு.ச 1973 பிரிவு 437-A- ன் கீழ் உத்தரவு :-**

வழக்கில் கு.வி.மு.ச 1973 பிரிவு 437-A- ன் கீழ் பிணையப்பத்திரம் பெறப்பட்டுள்ளது. மேற்படி பிணையப்பத்திரமானது தீர்ப்புரை தேதியிலிருந்து 6 மாத காலத்திற்கு நடைமுறையில் இருக்கும் என்றும், பின்னர் அப்பிணையப்பத்திரம் தானாகவே காலாவதியாகி விடும் என்று உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு இன்று **(01.07.2026)** திறந்த நீதிமன்றத்தில் அவையறியப்பகரப்பட்டது.

ஒம்/- திருமதி. V. பார்கவி, B.A., B.L., LLM.,
நீதித்துறை நடுவர்,
நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்-1,
பத்மனாபபுரம்

**பின் இணைப்பு**

**அரசுத்தரப்பு சாட்சிகள்**

| | | | |
|---|---|---|---|
| அ.சா.1 | அகில் | 29.05.2026 | அ.சா.ஆ.1 |
| அ.சா.2 | அஜின் | 29.05.2026 | அ.சா.ஆ.2 |
| அ.சா.3 | பிரட்லின் டினோ | 29.05.2026 | அ.சா.ஆ.3 |

| | | | |
|---|---|---|---|
| அ.சா.4 | ராஜகுமார் (தலைமை காவலர்) | 10.06.2026 | அ.சா.ஆ.4 முதல் அ.சா.ஆ.8 |

**அரசுத்தரப்பில் குறியிடப்பட்ட சான்றாவணங்கள்**

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1/அ.சா.1 | 30.06.2019 | புகார் மனு |
| அ.சா.ஆ.2/அ.சா.2 | 01.07.2019 | பார்வை மகஜரிலுள்ள அ.சா.2-ன் 2 வது கையொப்பம் |
| அ.சா.ஆ.3/அ.சா.4 | 01.07.2019 | பார்வை மகஜரிலுள்ள அ.சா.3-ன் முதலாவது கையொப்பம் |
| அ.சா.ஆ.4/ அ.சா.4 | 30.06.2019 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.5/அ.சா.4 | 01.07.2019 | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.6/அ.சா.4 | 01.07.2019 | பார்வை மகஜர் |
| அ.சா.ஆ.7/அ.சா.4 | 30.07.2019 | காயச்சான்றிதழ் |
| அ.சா.ஆ.8/அ.சா.4 | 07.11.2019 | சட்ட பிரிவு மாறுதல் அறிக்கை |

**அரசுத்தரப்பு சான்று பொருட்கள்** : இல்லை

**குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்** : இல்லை

**குறிப்பு** :-

1. வழக்கு விசாரணை காலத்தில் குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் பிணையில் சென்றுள்ளார்கள்.
2. எந்தவொரு அரசு தரப்பு சாட்சியமும் 3 நாட்களுக்கு மேல் விசாரிக்காமல் நிறுத்தி வைக்கப்படவில்லை.
3. வழக்கின் முடிவு சம்மந்தப்பட்ட காவல் துறையினருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒம்/- திருமதி. V. பார்கவி, B.A., B.L., LLM.,
நீதித்துறை நடுவர்,
நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்-1,
பத்மனாபபுரம்

Judicial Magistrate Court No.1,
Padmanabhapuram.

Court Seal.

“ The parties shall apply, as soon as possible, for the return of all exhibits which they may wish to preserve, as the record will be liable to be destroyed after three years from this date’’.